Sri MANAKULA VINAYAGAR
Medical college and Hospital
*Kalitheerthalkuppam, Madagadipet, Puducherry- 605107*

MANA - KURAL
*The official podcast of SMVMCH*

**Name of Resource person: Dr.P.RENUGA DEVI** **Podcast Title: Avoid over the counter medications**

**Department: PHARMACOLOGY** **Category: Public Awareness**

## TRANSCRIPT

### OTC யை தவிர்ப்போம்

வணக்கம். நான் Dr.P.ரேணுகா தேவி ,மருந்தியல் துறை போதகர் ஸ்ரீ மணக்குள விநாயகர் மருத்துவ கல்லூரி மருத்துவமனை .இன்றைய ஒளிப்பதிவில் நாம் OTC என சொல்லப்படும் over the counter medications உடைய தீமைகளைப் பற்றி கேட்போம். OTC மருந்துகள் என்பது மருத்துவரின் ஆலோசனைச் சீட்டு அதாவது Prescription slip இல்லாமல் நேரடியாக மருந்துக்கடைகளில் வாங்கக்கூடிய மருந்துகளாகும். இப்போது அம்மருந்துகளின் தீமைகளைப் பற்றி காண்போம்.

உதாரணத்திற்கு நீங்கள் சளி தொந்தரவிற்காக மருந்து வாங்குவதிற்கு ஒரு மருந்தகத்திற்குச் சென்றால் அம்மருந்தாளுநர் "set u "மாத்திரை எனக் கூறி 3 மாத்திரைகளை நமக்களிப்பார் அவற்றில் ஒன்று ஆண்டிபயாட்டிக் மாத்திரையாக இருக்கும். அம்மாத்திரைகளை நீங்கள் உட்கொள்ளும் போது அம்மாத்திரைக்கான நோய் எதிர்ப்பு சக்தியை அக்கிருமிகள் பெற்றுவிடும். பின்னர் எந்த ஒரு நோய் தொற்று வந்தாலும் அம்மாத்திரையினால் அக்கிருமிகளை எதிர்கொள்ள முடியாமல் போய்விடும். இதை ஆங்கிலத்தில் antibiotic resistance எனக் கூறுவோம்.

ஆகவே மருத்துவரின் ஆலோசனை இல்லாமல் நாம் மருந்துகள் உபயோகிப்பதைத் தவிர்க்க வேண்டும். Paracetamol மாத்திரை, அனைவரும் அறிந்த மாத்திரை. அம்மாத்திரைகளினால் பல மக்களுக்கு வயிற்று வலி, வாந்தி, குமட்டல் போன்ற பக்க விளைவுகள் ஏற்படுகின்றன மேலும், அதிகப்படியான வலி மாத்திரைகளை உட்கொள்ளும் போது சிறுநீரகம், கல்லீரல் போன்ற உறுப்புகள் பாதிப்படையக்கூடும்.

ஒரு மருந்தைப்பற்றி எந்த விபரமும் அறியாத போது, அம்மருந்தினால் உங்களுக்கு பக்க விளைவுகள் ஏற்பட்டால், அவற்றை குணப்படுத்துவது மருத்துவருக்கே மிகப்பெரிய சவாலாக முடியும். ஆகையால், மருத்துவரின் ஆலோசனையின்றி மருந்துகள் உட்கொள்வதை தவிர்ப்போம்.

OTC மருந்துகளை தவிர்ப்போம்!!!!
மருத்துவரின் ஆலோசனையை பெறுவாம்!
பக்க விளைவுகளைத் தடுப்போம்!
உடல் நலம் காப்போம்!
**நன்றி!!!!!!**

Signature of the Resource Person
Pharmacology Department
SMVMCH, Kalitheerthalkuppam
Puducherry

Professor & Head
Signature of the HOD
Pharmacology Department
SMVMCH, Kalitheerthalkuppam
Puducherry